# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண்.49/2009**

பெயர்: பாலு நாள்: 05.04.2025

பி.வா.சா.1 - வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

பி.வா.சா.1 - பாலு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி : 11:10

வாதி இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். இந்த வழக்கில் ஆரம்ப காலத்தில் நான் தோன்றா தரப்பினராக இருந்ததால் எனக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால், சரிதான். இந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து செய்யும் வரை வாதிக்கு சொத்து உரிமையானது என்று தீர்மானிக்கப்பட்டது சரிதானா என்றால், சரிதான். மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் தான் மணிவாசகம் பச்சமுத்துவிற்கு கிரையம் செய்துள்ளார் என்றால், சரிதான். இவ்வழக்கிற்கு முன்னிட்டு நான் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 217/2008 தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.1ன் குறுக்கி விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11:19

ஒப்பம்/பாலு

ஒப்பம்/திருமதி.இரா,இளமதி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.